அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை : 29/2025

எனது இலக்கம் : EST-1/CIRL/03/0001
பொது நிர்வாக, மாகாண சபைகள்
மற்றும் உள்ளூராட்சி அமைச்சு
சுதந்திர சதுக்கம்
கொழும்பு 07.

2025.11.26

அமைச்சுக்களின் செயலாளர்கள்
மாகாண பிரதமச் செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள்
பொதுக்கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச்சட்ட சபைத் தலைவர்கள்

**விஷ போதைப்பொருளை முற்றாக ஒழிப்புக்கான "ரட்டம எகட்ட தேசிய செயல்பாடு " நிகழ்ச்சித்திட்டத்திற்கு இணைந்த வகையில் அதற்கான கூட்டமைப்புக்களை (Collectives)/ வட்டங்களை (Circles) தாபன மட்டத்தில் அமைத்தல்.**

"விஷ போதைப்பொருள் அற்ற நாடு – மகிழ்ச்சியான நளை" என்பதை உருவாக்குவதை நோக்காகக் கொண்டு இந்நாட்டிற்குள் செயற்படும் விஷ போதைப்பொருள் கடத்தலை முற்றாக ஒழிக்கும் நோக்குடன் நடைமுறைப்படுத்தப்படவுள்ள "ரட்டம எகட்ட தேசிய செயல்பாடு" நிகழ்ச்சித்திட்டம் தொடர்பில் வழங்கப்பட்டுள்ள இலக்கம் අමප /25/1937/801/026 மற்றும் 2025.10.13 ஆந் திகதிய அமைச்சரவைத் தீர்மானம் மற்றும் அதனை நடைமுறைப்படுத்தி தேசிய, மாவட்ட மற்றும் பிரதேச மட்டத்திலான நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்வதற்குத் தேவையான வழிகாட்டல்களைக் குறிப்பிட்டு சனாதிபதி செயலாளரினால் வெளியிடப்பட்டுள்ள இலக்கம் PS/ADA/Circular/13/2025 மற்றும் 2025.11.14 ஆந் திகதிய சுற்றறிக்கையுடன் தொடர்பானதாகும்.

02. இலங்கை சமூகத்தை ஆட்கொண்ட பாரதூரமான அனர்த்தமாக தற்போது விஷ போதைப்பொருள் விநியோகம் மற்றும் பாவனை அடையாளம் காணப்பட்டுள்ளது. இது இலங்கைச் சமூகம் எதிர்கொள்ளும் ஓர் உள்ளக பிரச்சினையாக மேலோட்டமாகத் தோன்றினாலும் அதன் மூலங்கள் நாட்டின் எல்லைக்கு வெளியேயான நாடுகள் வரை பரவிக் காணப்படுகின்ற சிக்கலான வலையமைப்பாக இனங்காணலாம். இவ் விஷ போதைப்பொருள் வலையமைப்பை உடைப்பதெனில் முதலில் நாட்டிற்குள் விஷ போதைப்பொருள் வழங்கலையும் மற்றும் கேள்விக்கான வாய்ப்புக்களையும் நீக்குதல் வேண்டும். இது அரசியல் தலைமைத்துவம், அரச சேவை மற்றும் சிவில் சமூகம் ஆகியவற்றின் மீது சுமத்தப்பட்டுள்ள கைவிடப்பட முடியாத பொறுப்பாகும் என்பதினால் அதற்காக இவ் மூன்று பிரிவுகளும் ஒன்றாக இணைந்து நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

03. அரசாங்க உத்தியோகத்தர்களுக்குப் பொருந்தும் தாபனவிதிக்கோவையின் தொகுதி II இன் XLVII ஆம் அத்தியாயத்தின் 2 ஆம் பிரிவின் பிரகாரம், ஒரு உத்தியோகத்தர் கடமையில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் போது அல்லது கடமையில் ஈடுபட்டுக் கொண்டிராத போது தான் பணியாற்றும் அலுவலகச் சுற்றாடலில் அல்லது மற்றுமொரு அரச தாபனச் சுற்றாடலிலோ விஷ போதைப்பொருளைப் பயன்படுத்தியிருத்தல், தம்வசம் வைத்திருத்தலும் பாரிய துர்நடத்தையாகும்.

04. அரசாங்க உத்தியோகத்தர்கள் விஷ போதைப்பொருள் பாவனையிலிருந்து விலகியிருந்தாலும், அதனூடாக, முழுமையான விஷ போதைப்பொருள் அச்சுறுத்தலை கட்டுப்படுத்துவதற்காக வழங்குவது சிறிய பங்களிப்பாகும். அதனால் அரசாங்க உத்தியோகத்தர்கள் விஷ போதைப்பொருளை விநியோகிப்பதிலிருந்தும் மற்றும் பயன்படுத்துவதிலிருந்தும் விலகியிருப்பதினை போன்றே இயன்ற அனைத்து முறைகளிலும் வெளிச் சமூகமும் விஷ போதைப்பொருளை விநியோகிப்பதிலிருந்தும் மற்றும் பயன்படுத்துவதிலிருந்தும் விலகுவதற்கும் அவர்களால் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். அதற்காக தாபன ரீதியாக ஒரு கூட்டான வேலைத்திட்டத்தினை தயாரிக்க வேண்டியுள்ளது.

05. ஒவ்வொரு அமைச்சிலும், ஒவ்வொரு திணைக்களத்திலும், ஒவ்வொரு தாபனத்திலும் போன்றே அனைத்து கூட்டுத்தாபனம் மற்றும் நியதிச்சட்ட சபையிலும் ஒவ்வொரு பிரிவையும் உள்ளடக்கும் வகையில் கூட்டமைப்புக்கள்/ வட்டங்கள் அமைக்கப்படல் வேண்டும். இவ் கூட்டமைப்புக்களின்/ வட்டங்களின் அங்கத்தவர்களாக பதவிநிலை உத்தியோகத்தர்களைப் போன்றே பதவிநிலை அல்லாத உத்தியோகத்தர்களும் நியாயமான உள்ளடக்கத்தின் அடிப்படையில் நியமிக்கப்படல் வேண்டும். கூட்டமைப்பு/ வட்டம் ஒன்றின் அதிகபட்ச அங்கத்தவர்களின் எண்ணிக்கை 10 ஆக இருத்தல் வேண்டும் என்பதுடன், அமைக்கப்பட வேண்டிய கூட்டமைப்புக்கள்/ வட்டங்களின் எண்ணிக்கை உரிய தாபனத் தலைவரினால் தீர்மானிக்கப்படல் வேண்டும். கூட்டமைப்பின்/வட்டத்தின் உறுப்பினரான பதவிநிலை உத்தியோகத்தரினால் கூட்டமைப்பு/வட்டத்தின் நடவடிக்கைகளை ஒழுங்கமைக்கும் பொறுப்பை ஏற்றல் வேண்டும்.

06. மேற்படி 05 இன் பிரகாரம் அமைக்கப்பட்ட கூட்டமைப்புக்கள்/ வட்டங்களின் பொறுப்புக்கள் பின்வருமாறாகும்.

6.1. சமூகத்தில் பரவியுள்ள விஷ போதைப்பொருள் விநியோகம் மற்றும் பாவனை தொடர்பான கூட்டமைப்பு/ வட்ட அங்கத்தவர்கள் தாமாக அறிந்து கொண்டு, கூட்டமைப்பாக/ வட்டமாக அது தொடர்பில் ஒன்றிணைந்து கலந்துரையாடல் மற்றும் அங்கத்தவர்களை விழிப்புணர்வூட்டல்.

6.2. தமது அலுவலக வளாகம்/ துறைக்குள் விஷ போதைப்பொருள் விநியோகம் அல்லது பாவனைக்கான நாட்டங்கள் காணப்படுகின்றதெனில் அது தொடர்பான விடயங்கள் கூட்டமைப்பு/ வட்டத்தினுள் கலந்துரையாடல்/ ஆய்வு செய்தல்.

6.3. தமது அலுவலக வளாகம்/ துறையினுள் விஷ போதைப்பொருள் பாவனையிலிருந்து விடுபட்ட இடமாக நடாத்திச் செல்வதற்கான நடவடிக்கைகளில் உத்தியோகத்தர்களை ஈடுபடுத்தல்.

6.4 தேசிய / மாவட்ட / பிரதேச ரீதியிலான செயற்பாட்டுக் குழுக்களினால் திட்டமிடப்படும் நிகழ்ச்சித்திட்டங்களுக்கு பங்களிப்பினை வழங்குதல்.

07. மேற்படி வழிகாட்டல்களின் பிரகாரம் தாபன மட்டத்தில் அமைக்கப்படும் கூட்டமைப்புக்கள் /வட்டங்களை நடைமுறைப்படுத்துவதன் மூலம் ““ரட்டம எகட்ட தேசிய செயல்பாடு" வெற்றிகரமாகச் செயற்படுத்தவும் மற்றும் அதன் பிரகாரம் இலங்கையிலிருந்து விஷ போதைப்பொருள் பாவனையை முற்றாக ஒழிப்பதற்குத் தேவையான ஒத்துழைப்பு மற்றும் செயற்திறனான பங்களிப்பு உங்களிடமிருந்து எதிர்பார்க்கப்படுகின்றது.

ஒப்பம் /எஸ்.ஆலோக பண்டார
செயலாளர்
பொது நிர்வாக, மாகாண சபைகள்
மற்றும் உள்ளூராட்சி அமைச்சு


தொலைபேசி : 0112662340
தொலைநகல் : 0112692158
மின்னஞ்சல் முகவரி : ade-i@pubad.gov.lk